நமது ஈழநாடு

www.namathueelanadu.com

குரல் 02 மலர் 24 ஜூன் 2022 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com



Simply Scan the QR code Your Phone Camera

Download the NamathuEelanadu app




"எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது" – *தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்*

# புலிகளில்லா காட்டிற்குள்...



ஈழநாடு





தீபச்செல்வன்

# குருந்தூர் மலையில் இனமும் தொன்மையும் புதைக்கப்படுகிறது!

**ஈழ மக்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 23 ஆலயங்களில் பௌத்த ஆக்கிரமிப்பை திணிக்கும் முயற்சிக்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.**

சைவமும் தமிழும் தழைத்தோங்கிய ஈழத்தில் தமிழ் மக்கள் தனித்து வாழ்ந்த பூமி என்பதற்கு பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. ஈழத்தை சிவபூமி என மூவாயிரம் ஆண்டுகள் தமிழர் நிலத்தில் வாழ்ந்த திருமூலர் என்கிற சித்தர் அழைத்திருக்கிறார். சிவாலயங்கள் நிறைந்த ஈழம், சைவப் பண்பாடு தழைத்தோங்கிய தமிழர் பூமியாக பெயர் பெற்றிருக்கிறது. அத்துடன் சங்க இலக்கியங்கள், தேவாரப் பதிகங்கள், சோழர்கால காப்பியங்கள் என பல்வேறு இலக்கிய ஆதாரங்கள் ஈழத்தின் புராதனம் குறித்துப் பேசுகின்றன. அத்துடன் ஈழத்தின் பல பகுதிகளிலும் காணப்படுகின்ற சிவாலயங்களும் தொல்பொருட்களும் ஈழத்தின் பூர்வீகத்திற்குத் தக்க சான்றுகளாகும்.

ஈழப் போராட்டம் எண்பது எழுபது வருடங்களாக நடக்கிறது என்று சொல்லப்பட்டாலும் ஈழத்தை சிங்கள பூமியாக்கும் ஆக்கிரமிப்புத் திட்டம் விஜயனின் வருகையுடன் தொடங்கியது. இன்றைய தென்னிலங்கையின் பல இடங்களில் வைச ஆலயங்கள் பலவும் இரண்டாயிரம் வருடங்களாக இருந்திருக்கின்றன. அதற்கு இன்றும் புராதன சின்னமாய் இருக்கிற கதிர்காமமும் இல்லாமல் ஆக்கப்பட்ட தொண்டீச்சரம் என்ற சிவாலயமும்தான் தக்க சான்றுகள் ஆகின்றன. ஆக ஈழத்தை பௌத்த சிங்கள பூமியாக்குகின்ற வேலை பல ஆண்டுகளாக நடக்கின்றன என்ற உண்மையின் அடிப்படையில்தான் ஈழம் இன்று எதிர்கொள்ளும் ஆபத்துக்களை நாம் அணுக வேண்டியுள்ளது.

இதன் ஒரு பகுதியாகத்தான் ஈழத்தின் வடக்கே முல்லைத்தீவின் குருந்தூர் மலைப் பகுதியில் சிங்கள பௌத்தத்தை திணிக்கின்ற முயற்சிகளை சிங்கள அரசு தீவிரப்படுத்துகின்றது. ராஜபக்சவினரின் ஆட்சிக் காலத்தில் சிங்கள பௌத்த மயமாக்கல் முயற்சிகள் பெருமெடுப்பில் நடைபெற்று வந்தன. அத்துடன் மைத்திரி ரணில் ஆட்சியில் வடக்கு கிழக்கில் 1000 விகாரைகள் அமைக்கின்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. போரில் தமிழர் தாயகத்தை கைபற்றிய சிங்கள அரசு, வடக்கு கிழக்கில் தமிழர்களின் புராதன இடங்கள் முழுவதும் பௌத்த விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் நிறுவி தமிழின அழிப்பை மேற்கொள்ளும் வேலைகளைத் துவங்கியது.

முழுக்க முழுக்க சைவமும் தமிழும் தழைத்தோங்கிய நிலத்தில் 2009 முள்ளிவாய்க்கால் இன அழிப்புப் போருக்குப் பின்னர், சிங்களய பௌத்த ஆதிக்கச் சின்னங்கள் நிறுவப்பட்டுள்ளன. தமிழர்களின் முக்கிய நகரங்களில் எல்லாம் பௌத்த விகாரைகளை கட்டி எழுப்பிய சிங்கள இராணுவத்தினர் அதற்காக தென்னிலங்கையில் இருந்து பிக்குகளை வரவழைத்து குடியேற்றம் செய்துள்ளனர். அத்துடன் அரச மரங்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் புத்தர் சிலைகள் எழுப்பப்பட்டுள்ளன. அத்துடன் சைவ ஆலயங்கள் காணப்படும் இடங்களிலும் விகாரைகளை சொருகுகின்ற வேலையை செய்துள்ளனர்.

முல்லைத்தீவு செம்மலை பிள்ளையார் ஆலயத்தில் மிக பிரமாண்டமாக அமைக்கப்பட்ட விகாரை, கனகாம்பிகைக் குளம் அம்மன் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை போன்றவற்றை இங்கே குறிப்பிடலாம். ஏன் சைவ ஆலயங்களுக்குள் புத்தர் சிலைகளையும் பௌத்த விகாரைகளையும் சொருக வேண்டும்? தமிழர்களை அழித்ததுபோலவே தமிழர்களின் கடவுள்களையும் அழிக்கவே இந்த திட்டத்தை சிங்கள அரசும் இராணுவமும் முன்னெடுத்து வருகின்றது. ஈழ மக்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 23 ஆலயங்களில் பௌத்த ஆக்கிரமிப்பை திணிக்கும் முயற்சிக்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)



நமது ஈழநாடு
www.namathueelanadu.com



# அபாயத்தில் தீவு தேசம்

-தாயகன்-

தமிழழத்திற்கான தேசிய விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டதொரு பொருளாதார முடக்கத்தினை மேற்கொண்டிருந்தது.

எரிபொருட்கள் உட்பட அத்தியாவசியப் பொருட்களை முடக்குவதன் ஊடாக தமிழினத்தின் தேசிய விடுதலையை முழுமையாக முடக்கி விடலாம் என்ற குருட்டுத்தனமான நம்பிக்கையை சிறிலங்கா அரசாங்கம் கொண்டிருந்தது.

துரதிஷ்டவசமாக, சிறிலங்கா அரசாங்கத்தின் அவ்விதமான குருட்டு நம்பிக்கை உடைத்தெறியப்பட்டது. பொருட்களுக்கான தட்டப்பாடுகள் நிலவினாலும், உள்ளூர் உற்பத்திகளை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மிக நேர்த்தியான முறையில் முகாமை செய்ததன் ஊடாக தமிழர் தாயகத்தில் பட்டினி தடுத்து நிறுத்தப்பட்டது.

ஆனால், தற்போது சிறிலங்கா தீவு தேசமே வடக்கு, கிழக்கு அன்றிருந்ததையும் விட மிக மோசமான நிலையிக்குச் சென்றிருக்கின்றது. நாள்தோறும் நீண்ட வரிசைகளில் தீவு தேசத்தின் அனைத்துப் பக்கங்களிலும் மக்கள் அத்தியாவசியப் பொருட்களுக்காக காத்திருக்கின்றார்கள்.

இதனைவிடவும், அத்தியாவசிப் பொருட்களுக்கான போராட்டங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. அவற்றை அடக்குவதற்கு படைத்தரப்பு முழு அளவில் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

சிறிலங்காவின் 17 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம், 5.7மில்லியன் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் அவசரமாகத் தேவைப்படுகின்றன. அத்துடன் 4.9 மில்லியன் மக்கள் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர் என்று உலக உணவுத் திட்டத்தின் ஆய்வு, சமகால கள ஆய்வு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், 1.7 மில்லியன் மக்கள் மனிதாபிமான உதவிகள் தேவைப்படுபவர்களாக உள்ளனர். 86 சதவீதமானவர்கள் மலிவான விலைகளில் பொருட்களை பெறுதல் போன்ற சமாளிக்கும் வழிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். 95 சதவீதமானவர்கள் குறைவான சத்துள்ள உணவைப் பயன்படுத்துகின்றனர். 83 சதவீதமானவர்கள் பகுதி அளவில் உணவைக் கட்டுப்படுத்தியுள்ளனர். 66 சதவீதமானவர்கள் தினசரி உணவின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளனர் என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுக்கின்றது.

இதிலும், குறிப்பாக, கொழும்பில் உணவு தொடர்பான பணவீக்கம் மே மாதத்தில் 57.4 சதவீதமாக உயர்ந்துள்ளது. அத்துடன், சமையல் மற்றும் போக்குவரத்துக்கான எரிபொருளின் பரவலான தட்டுப்பாட்டினால் ஏழைக் குடும்பங்கள் உணவுப் பொருட்களை வாங்குவதற்கு இயலாமல் சிரமப்படுகின்றனர். ஏறக்குறைய 5 மில்லியன் மக்கள், அதாவது இலங்கையின் சனத்தொகையில் 22 சதவீதமானவர்கள் உணவுப் பாதுகாப்பற்றவர்களாகவும் உதவி தேவைப்படுபவர்களாகவும் உள்ளதாகவும் பிறிதொரு சர்வதேச ஆய்வு கூறுகின்றது.

இதேவேளை, கடந்த 7மாதங்களில் 1.7 மில்லியன் சிறுவர்களுக்கு அவசியமான போசணை, சுகாதாரம், தூயகுடிநீர், கல்வி மற்றும் உளநலசேவை உள்ளிட்ட தேவைப்பாடுகள் உள்ளது’ என்று ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் சிறிலங்கா தொடர்பில் செய்த மதிப்பாய்வின் பிரகாரம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், கர்ப்பிணி தாய்மார்களுக்கான திரிபோசா பொதிகள் உட்பட அவர்களின் அவசர, மற்றும் ஆபத்தான நிலைமைகளின் போது பயன்படுத்தப்படும் 25வகையான மருந்துப்பொருட்கள் முடியும் தருவாயில் உள்ளதாகவும் தெரிவித்துள்ள ஐ.நா.சிறுவர் நிதியம், ஏற்கனவே உலகளவில் மந்தபோசனை உள்ள சிறுவர்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் 7ஆவது இடத்தில் உள்ள சிறிலங்காவில் எதிர்வரும் நிலைமைகள் மோசமடையும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனைவிடவும், அன்றாடம் கூலித்தொழில் புரிபவர்கள், உள்ளிட்ட பணியாளர்கள் வேலைகளை இழந்துள்ளனர். அரச உத்தியோகத்தர்களுக்கு இருவார விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ள போதும் கொழும்புக்கு வெளியில் உள்ள மாணவர்களும், அதிபர், ஆசிரியர்களும் பாடசாலைகளுக்கு சமுகமளிப்பதில் சிக்கல்கள் காணப்படுகின்றன.

ஏறக்குறைய சிறிலங்காவின் அரசாங்க இயந்திரம் முடங்கும் நிலைமையை அடைந்துள்ளது. இவ்விதமான



மோசமான நிலைமைகள் ஏற்படுவதற்கு ராஜபக்ஷக்களே காரண கர்த்தாக்களாக உள்ளனர்.

கடந்தகால அரசியல் தலைவர்களின் கடன்பெற்று நாட்டை நிருவகிக்கும் முறைமை பொருளாதார நெருக்கடிகளுக்கு வித்திட்டது என்றாலும், இத்தனை மோசமான நிலைமைகளை அடைவதற்கு ராஜபக்ஷக்கள் உர விவகாரம், முதல் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்லுதல் வரையில் எடுத்த தவறான தமதமான முடிவுகளே அடிப்படையாக அமைகின்றன.

தற்போதைய நிலைமையில் இருந்து மீள்வதற்கு சிறிலங்கா அரசாங்கம் எடுத்த முயற்சிகள் இன்னமும் வெற்றிப்பாதையை அடைந்திருக்கின்றன என்று கூறுவதற்கு இல்லை.

கடந்த 20ஆம் திகதி தான் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் சிறிலங்காவுக்குச் சென்று கள நிலைமைகளையும் ஆராய்ந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகின்றார்கள்.

அதேநேரம், ஜப்பான் சிறிலங்காவின் அத்தியாசிய நெருக்கடிகளுக்காக 1.5மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. அமெரிக்கா, 6 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக தெரிவித்துள்ளது.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன இன்னமும் தமது இறுதியான முடிவினை கூறவில்லை. ராஜபக்ஷக்களுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருக்கும் சீனா, தனக்கு ஏற்கனவே செலுத்த வேண்டியுள்ள கடன்களை எவ்வாறு மீளப்பெறுவதென்றே சிந்திக்கின்றது.

அக்கடன்களை அடைப்பதற்கான தொகையை மேலதிக கடனாக வழங்குவதாகவே சீனா கூறுகின்றது. அத்துடன் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு நேரடியாகச் செல்லும் சீனத்தூதுவர் அந்தந்த பகுதி மக்களுக்கு நேரடியாக உலர் உணவுப்பொருட்களை வழங்குகின்றார்.

இதேவேளை, இந்தியா இதுவரையில் 2.4பில்லியன் டொலர்களை கடன் எல்லையாக வழங்கியிருந்தது. அதற்கான பொருட்களை அனுப்பும் செயற்பாடுகளும் ஏறக்குறைய முடிவுக்கு வந்தாகிவிட்டது.

மறுபக்கத்தில் ரஷ்யாவுடன் விமான விவகாரத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளால் அங்கிருந்து நெருக்களுக்கான தீர்வினை வழங்கும் வகையில் எரிபொருட்களைப் பெற்றுவிடலாம் என்ற சிறிலங்கா அரசாங்கத்தின் கணக்கு பிழைத்து விட்டது.

அதுமட்டுமன்றி, அடுத்து வரும் காலத்தில் ரஷ்யாவுக்கான தேயிலை ஏற்றுமதி கூட விழ்ச்சி அடையும் ஆபத்தான கட்டத்தில் தான் நாடு உள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது சிறிலங்கா நிலைமைகளைச் சமாளிப்பதற்கு தடுமாறிக்கொண்டிருக்கின்றது. எந்வொரு நாடுகளோ, சர்வதேச நிதி நிறுவனங்களோ எழுந்தமானமாக சிறிலங்காவுக்கான நிதியை வழங்குவதற்கு தயாரில்லை.

பூகோள அரசியலுக்கு அப்பால், சிறிலங்காவின் ஒட்டு மொத்த வெளிநாட்டுக் கடன்கள் 51பில்லியன் டொலர்களைக் கடந்து விட்டது. அத்துடன் சிறிலங்கா ஏற்கனவே பெற்றுக்கொண்ட கடன்களை மீளவும் வழங்குவதற்கு தற்போது முடியாது என்று அறிவித்துவிட்டட்டது.

சிறிலங்காவின், பிரஜை ஒருவர் சராசரியாக ஒரு மில்லியன் ரூபா கடன்சுமையில் இருக்கின்ற நிலையில், எவ்வாறு சிறிலங்காவுக்கு மேலும் நிதியுதவிகளைச் செய்வது என்றே ஏனைய சர்வதேச நாடுகள் கருதுகின்றன.

இந்தியாகூட, சிறிலங்கா மீதான இருதரப்பு உறவுகள், கரிசனைகளுக்கு அப்பால், தனது பாதுகாப்பையும், பிராந்திய ஸ்திர நிலைமையையும் கருத்திற்கொண்டே உதவிகளை அளித்துள்ளது என்பது வெளிப்படையானது.

ஆனால், இந்தியாவினால் தொடர்ந்தும் சிறிலங்காவின் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டிருக்க முடியாது. காரணம், இந்தியக் குடிமக்கள் பலர் நெருக்கடியில் உள்ளார்கள். அதுமட்டுமன்றி அடுத்து நாடாளுமன்ற தேர்தல் நடைபெறவிருக்கின்றது. இதனால், எழுந்தமானமாக இந்தியா நிதியை விரயம் செய்யும் என்று கூறப்படுகின்றது.

ஆகவே, சமகால நிலைமைகளின் பிரகாரம், சிறிலங்காவுக்கு எந்தவொரு தரப்பும் தாமாக முன்வந்து நெருக்கடிகளைச் சீர் செய்வதற்காக டொலர்களாக அள்ளி வழங்கும் என்று கூறுவதற்கு இல்லை.

கொழும்புத் துறைமுகத்தில் தற்போதைய நிலையில் எரிபொருள், எரிவாயு, உள்ளிட்ட அதியாவசிய உணவு, மருந்துப் பொருட்களுடன் கப்பல் சுமார் ஒருவார காலத்திற்கு அதிகமாக காத்திருக்கின்றன.

ஆனால் சிறிலங்கா அரசாங்கம் கடன் பத்திரங்கரளை விடுவிப்பதற்கு தயாராக இல்லை. இதற்கு காரணம் டொலர்கள் இல்லாத பிரச்சினையே தான். அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில், எரிபொருள், எரிவாயு ஆகிய இரண்டையும் தீர்த்து விட்டால் நிலைமைகளை சீர்செய்து விடலாம் என்றே கருதுகின்றன.

இதற்காக, புலம்பெயர் தமிழர்களை முதலீடுகளைச் செய்யுமாறு பகிரங்கரமாக அழைக்கின்றது. ஆனால் அவர்களுக்கான உரிய பாதுகாப்பு உத்தரவாதங்கள் இல்லாது எவ்வாறு மூழ்கும் நிலையில் உள்ள தீவில் முதலீடு செய்வார்கள் என்பது கேள்விக்குரியானது.

அதுமட்டமன்றி, தமிழ்த் தேசிய இனத்தை, சிறிலங்காவின் பிரஜைகளாக பெரும்பான்மை சிங்கத் தரப்பு கருதாத வரையிலும், தமிழர்களுக்கான அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படாத வகையிலும் தற்போதைய நெருக்கடிகளுக்கு தீர்வு கிடைக்கப்போவதில்லை.

ஏனென்றால், சிறிலங்காவின் அத்தனை நெருக்கடிகளுக்கும், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படாமையே ஆணிவேராக உள்ளது. அதனை கண்டும் காணாதிருக்கின்றது அரசு. இதானால் நெருக்கடிகள் இன்னம் மோசமடையலாம். அதனையடுத்து வன்முறைகள் கூட வெடிக்கலாம்.



நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 02 மலர் 24 ஜூன் 2022 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com

# கிடப்பில் தமிழ்த் தேசிய அரசியல்

தமிழ்த் தேசிய அரசியல் தற்போது கிடப்பில் உள்ளமை வெகு வாகவே அவதானிக்கப்பட்டுள்ளது. தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் மற்றும் அரசியல் ஸ்திரமற்ற தன்மையால் இந்த நிலைமைகள் உருவாகியுள்ளன.

குறிப்பாக, தற்போதைய நெருக்கடிகளுக்குள் தமிழ் மக்களின் கோரிக்கைகளான பொறுப்புக்கூறல், நீதியைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை காணல் ஆகிய விடங்களை பேசுவதால் பயனில்லை என்ற நிலைப்பாட்டில் அதிகமான தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

குறிப்பாக, சிறிலங்கா அரசாங்கமே செயலிழந்துள்ள நிலையிலும், நாடாளுமன்றம் வெறும் பார்வையாளர் மன்றமாக மாறியுள்ள நிலை யிலும் எதனைப் பேசினாலும் அது ஆக்கபூர்வமானதாக அமையாது என்பது அப்பிரதிநிதிகளின் வாதமாகவுள்ளது.

அதேநேரம், தற்போதைய நெருக்கடிகள் அனைத்தையும் பயன்படுத்தி, இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக தரப்புக்கள் ஊடாக சிறிலங்கா அரசாங்கத்திற்கு அழுத்தங்களை அளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பிறிதொரு தரப்பினர் உள்ளனர்.

அதாவது, சிறிலங்கா அரசாங்கத்திற்கு உதவிகளை வழங்கும் இந்தியா உள்ளிட்ட தரப்புக்கள் தமிழஉகளை மையப்படுத்திய நிபந்தனைகளை விதித்தே அவற்றை வழங்க வேண்டும் என்பது அவர்களின் வாதமாக வுள்ளது.

வெறுமனே, சுமந்திரனும், சாணக்கியனும் தமது ஆதரவாளர்களை பயன்படுத்தி 'கோட்டா கோ கோம்'என்ற கோசத்திற்கு ஒருநாள் போராட்டத்தினை மேற்கொண்டு வலுச்சேர்த்திருந்தனர். அதற்கு அப்பால் எதுவுமே நடைபெற்றிருக்கவில்லை. அந்தப் போராட்டங்கள் கூட முறையாக ஒழுங்கமைக்கப்பட்டவை அல்ல.

இதனிடையே, காலிமுகத்திடலில் உள்ள 'கோட்டா கோ கோம்' களமா–னது, தமிழர்களின் பிரச்சினைகளை தென்னிலங்கைக்கு எடுத்துக் கூறு வதற்கும், தென்னிலங்கையுடன் ஒருங்கிணைந்து போராடுவதற்கும் உரியது என்ற கருதுருவாக்கமொன்று வெகுவாக மேலெழுந்து வருகின்றது.

ஆனால், இனப்பிரச்சினைக்கான தீர்வு, பொறுப்புக் கூறல் விடயங்களை தவிர்த்து விட்டு ஒருங்கிணைவதற்கு தயாராக இருக்கும் காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுடன் எவ்வாறு பாதிக்கப்பட்ட தரப்பான தமிழ்த் தரப்பு கைகோர்ப்பது என்பது பெருங்கேள்வியாகும்.

இவ்வாறிருக்கையில், சிறிலங்காவில் நெருக்கடிகள் ஏற்பட்டு தன்னெழுச்சியான போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் தமிழ்த் தேசியத் தளத்தில் செயற்படும் கட்சிகளும், ஏனைய தரப்புக்களும் ஒருங்கிணைந்து நிலைமைகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் கலந்துரையாடியுள்ளதா என்றால் இல்லை.

ஆகக்குறைந்தது, பொருளாதார நெருக்கடியில்இருந்து எவ்வாறு தமது அரசியல் களத்தில் உள்ள மக்களை மீட்டெடுப்பது என்பது தொடர்பில் சிந்திக்கப்பட்டதா என்றால் அதுவும் நடைபெற்றிருக்கவில்லை.

இவ்வாறான நிலையில், தமிழ் மக்களை வெறும் வாக்களிக்கும் இயந்திரங்களாகவே தமிழ்த் தேசியத்தளத்தில் உள்ள மக்கள் பிரதி நிதிகளும், அரசியல் கட்சிகளும் கருகின்றனவா என்ற கேள்விகள் வெகுவாக எழுகின்றன.

இந்நிலையில், தமிழ் மக்களின் எதிஉகால பொருளாதார நிலைமை–களை எவ்வாறு கட்டியெழுப்புவது, தமிழ் மக்களின் எதிஉகால அரசியல் செல்நெறிகள் எவ்வாறு அமைய வேண்டும், குழம்பியுள்ள தென்னிலங்கை தேசிய அரசியலில்ல தமிழஉகளின் வகிபாகம் எவ்வாறு இருக்க வேண்டும் ஆகிய மூன்று விடயங்கள் தொடர்பில் உரிய உரையாடல்கள் அவசிய மாகின்றன.

இந்த உரையாடல்களில் நீ, பெரிது, நான் பெரிது என்ற சுயநல சிந்தனைக்கு அப்பால், தாயக, தமிழக, புலம்பெயர் தரப்புக்களை உள்ளடக்கிய கூட்டு அணுகுமுறையொன்று மிகவும் இன்றியமை யாததாகவுள்ளது.

இவ்விதமான, கூட்டு அணுகுமுறையொன்று முறையாக கட்ட மைக்கப்பட்டு முன்னெடுக்கப்படத் தவறும் பட்சத்தில் அடுத்துவரும் காலத்தில் தமிழ் தேசிய அரசியல் வெறும் கோசங்களால் நகரும் துர்ப்பாக்கிய நிலைமைகளே தோற்றம் பெறவுள்ளன.

# கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதை



இதயச்சந்திரன்,
சிரேஷ்ட ஊடகவியலாளர்

அண்மையில் இந்தியாவின் மனித உரிமை, மத உரிமை பற்றிய முரண்நிலைக் கருத்துக்களை முன் வைத்தார் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் அன்ரனி பிலிங்கன். அதற்குக் கடுமையான எதிர்வினையாற்றினார் இந்திய வெளிநாட்டமைச்சர் ஜெய்சங்கர்.

தற்போது நபிகள் நாயகம் பற்றி பா.ஜ.க முக்கியஸ்தர் சிலர் முன் வைத்த விமர்சனங்களால், அரபு வளைகுடா நாடுகள் கொதித்தெழுந்துள்ளன. குறிப்பாக 'மசகு எண்ணெய்' பொருளாதார பலமிக்க நாடுகளே கண்டனங்களை வெளி யிடுகின்றன.

இவை பூகோள அரசியல் அரங்கில், அமெரிக்கா வுடன் ஒத்திசைவாக இயங்கும் நாடுகள். இந்தியா மீதான இவ்வகையான அழுத்தங்களை அமெரிக்காவும் விரும்புவது போல் தெரிகிறது. உக்ரேன் விவகாரத்தில், ரஷ்யா மீதான இந்தியாவின் சார்புநிலை, மேற்குலக நாடுகளுக்கு பெரிதும் உவப்பாக அமையவில்லை.

இந்நிலையில் எண்ணெய் உற்பத்தி விவகாரத் தில் அமெரிக்கா- ஒபேக்- ரஷ்யா இடையே கடுமையான போட்டி நிலவுவதை அவதானிக்கலாம். பிலிங்கனின் விமர்சனங்கள், அரபு நாடுகளின் கண்டனங்கள் என்பன ரஷ்யாவின் எண்ணெய் விநியோகத்தை நோக்கி இந்தியாவைத் தள்ளி விடலாம்.

அதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பித் துள்ளதாக செய்திகள் வெளிவருகின்றன. அரபுல கின் எண்ணெய் ஏற்றுமதியில், கணிசமான சந்தைப் பங்கினைக் (market share) கொண்ட சீனாவும் இந்தியாவும் ரஷ்யாவின் பக்கம் திரும்பி, அந்த வர்த்தகத்தை தமது சொந்த நாணயத்தில் செய்தால் அது அமெரிக்காவைப் பாதிக்கும்.

அரபு நாடுகளின் எண்ணெய் ஏற்றுமதியிலும் வீழ்ச்சி ஏற்படும்.

கிணறு வெட்ட, பூதம் கிளம்பிய கதையாக மாறிவிடலாம்.

## மறைந்த காட்டூனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து...



# தொடர்கிறது இனவழிப்பு!

# திவாலாகியும் திருந்தாத ஸ்ரீலங்கா அரசு

## தமிழ் தேசிய ஆய்வு அமையம் கண்டனம்






மிகப் பெரும் பொருளாதார சரிவை சந்தித்துள்ள போதும் கூட ஸ்ரீலங்கா அரசு தமிழ் இனத்திற்கு எதிரான இனவழிப்பை நிறுத்தவில்லை என்று தெரிவித்துள்ள தமிழ் தேசிய ஆய்வு மையம், அரச கட்டமைப்பு முழுமையாக திவா லாகியும் இன்னமும் ஸ்ரீலங்கா திருந்தவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. நமது ஈழநாடு பத்திரிகையின் தமிழ் தேசிய ஆய்வு அமையம் தொடரும் தமிழ் இன அழிப்பு குறித்து வெளியிட்டுள்ள விரிவான அறிக்கை வருமாறு:

### வீழ்ந்த ஸ்ரீலங்கா

"தமிழீழ விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டதாக மார்தட்டும் ஸ்ரீலங்கா அரசு, தற்போது மண்ணில் சரிந்து புதைந்து அதளபாளத்தில் வீழ்ந்து கிடக்கின்றது. கடன்களுக்கு மேல் கடன், டொலர் பற்றாக்குறை, அத்தியாவசியப் பொருட்கள் இன்மை என்று ஸ்ரீலங்கா அரசு முற்று முழுதாக வீழ்ந்து கிடக்கின்றது. வரலாறு காணாத இந்த நிலையின் போதும் கூட ஸ்ரீலங்கா திருந்தவில்லை என்பதே எமது பெரும் கவலையாகும்.

போரில் தமிழீழ விடுதலைப் புலிகளை வென்றுவிட்டோம் என்று கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக ஸ்ரீலங்கா அரச தலைவர்கள் போட்டி போட்டுக் கொண்டிருந்தனர். மகிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன என்று கடந்த கால தலைவர்கள் போரில் தமிழ் தரப்பை வென்ற வெற்றிப் பெருமிதத்தைப் பேசியே தமது ஆட்சியைத் தொடர்ந்த நிலையில், கோத்தபாய ராஜபக்சவும் இவ்வாறு பேசி ஆட்சியைப் பிடித்து தொடர்ந்த நிலையில் விடுதலைப் புலிகள் இல்லாமலே வீழ்ந்துள்ளது ஸ்ரீலங்கா.

### பஞ்சம் பசியில் சாகும் மக்கள்

உலகின் பஞ்ச நாடுகளில் ஒன்றாக ஸ்ரீலங்கா முக்கிய இடத்தைப் பிடித்துள்ளமையை ஐ.நா அமைப்பு அண்மையில் நடாத்திய ஆய்வு ஒன்று வெளிப்படுத்துகின்றது. ஐ.நா.வின் உலக உணவு திட்டமும், இலங்கையின் தேசிய திட்டமிடல் துறையும் இணைந்து நடத்திய இந்த ஆய்வில் அதிர்ச்சிகரமான முடிவுகள் வெளியாகி உள்ளன. அந்தவகையில் இலங்கையில் விலைவாசி உயர்வு மற்றும் மக்களின் வாங்கும் திறன் குறைந்ததால் 80 சதவீதத்துக்கு அதிகமான குடும்பங்கள், மலிவான உணவுகள், விருப்பமில்லாத உணவுகள் அல்லது குறைவான உணவுகளையே தினந்தோறும் உண்டு வருவது கண்டறியப்பட்டது.

வெறும் தேநீர் ஒன்று ஐம்பது ரூபாவுக்கும் பால்த் தேநீர் நூறிலிருந்து இரு நூறு ரூபாவுக்கும் விற்கப்படுவதுடன் பெரும் பாலும் கடைகளில் தேநீர் மற்றும் பால்டா இல்லாத நிலையே காணப்படுகின்றது. பலசரக்கு கடை-களும் பல்பொருள் அங்காடிகளும் பொருட்கள் இல்லாமல் வெளித்துக் காணப்படுகின்றது. ஒரு கிலோ மீனின் விலை தற்போது இரண்டாயிரம் ரூபாவைக் கடக்கும் நிலையில் உள்ளது.

### ஏன் இந்த நிலை?

தனது சொந்த மக்களைக் காப்பாற்ற முடியாமல் ஸ்ரீலங்கா அதிபர் கோத்தபாய ராஜபக்சவும் பிரமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவருடன் ஒருவர் முட்டி மோதிக் கொண்டுள்ளனர். இந்த நிலையில், ஈழவிடுதலைப் போராட்டத்தை அழித்து ஈழ மக்களை ஸ்ரீலங்காவுடன் மீட்டு இணைக்கப் போவதாக யுத்தம் நடாத்திய ஸ்ரீலங்கா அரசு இன்றைக்கு தம் சொந்த இன மக்களையே காப்பாற்ற முடியாமல் அவர்களின் சீற்றத்திற்கும் சாபத்திற்கும் உள்ளாகிய கொடுமையை இந்த உலகம் கண்டு வருகின்றது.

ஈழத் தமிழர்கள்மீது பாரிய பொருளாதார தடை மற்றும் இனவழிப்புப் போரை நடாத்திய ஸ்ரீலங்கா, அதனைத் தவிர்த்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. ஏனெனில் ஈழ மக்களை அழிக்கவே ஸ்ரீலங்கா பெரும் பொருளாதாரத்தை செலவு செய்ததுடன் இன்றளவும் ஈழ மக்களை ஒடுக்க ஸ்ரீலங்கா இராணுவத்திறங்கு பெருமளவு நிதியை ஒதுக்கி வருகின்றமை காரணமாகவே இந்த நிலை ஏற்பட் டுள்ளது.

### பிரபாகரன் இருந்திருந்தால்

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபா-கரனிடம் இந்த நாட்டைக் கொடுத்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்றும் அப்போது நாம் இப்படி கஷ்டப்படவில்லை என்றும் சிங்கள மக்கள் கூறுகின்ற ஒரு நிலையில், தலைவர் பிரபாகரன் அவர்கள் களத்தில் இல்லாமலே சிங்கள மக்களை வெற்றி கொண்டிருக்கிறார்.

அத்துடன் இன்றைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்திருந்தால் சிங்கள மக்கள் தமிழீழத்தில் வந்து தஞ்சம் புகுந்திருக்க முடியும். அத்துடன் தமிழீழம் சிங்கள தேசத்திற்கு மனிதாபிமான உதவிகளை அள்ளி வழங்கியிருக்கும். இந்த வரலாற்று சந்தர்ப்பத்தை இழந்தமையினாலும்தான் ஸ்ரீலங்கா இன்றைக்கு வீழ்ச்சியடைந்து முடங்கிய நாடாகிவிட்டது.

### திவாலாகியும் திருந்தவில்லை

அண்மையில் குருந்தூர் மலையில் விகாரை அமைத்து கோபுரக் கலசம் மற்றும் புத்தர்சிலையை நிறுவும் முயற்சி இடம்பெற்ற நிலையில் ஈழ மக்கள் அதனை முறியடித்துள்ளனர். ஈழ மக்களின் பூர்வீக இடமான வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் முல்லைத்தீவு குருந்தூர் மலையில் இத்தகைய ஆக்கிரமிப்பு முயற்சி ஒன்றை ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டமை தமிழ் இன அழிப்பின் தொடர்ச்சியாகும். அத்துடன் அரசு திவாலாகியும் திருந்தாத நிலை என்பதையும் அனைத்துலகம் அவதானிக்க வேண்டும்.

போரில் தமிழீழ விடுதலைப் புலிகளை வென்றுவிட்டோம் என்று கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக ஸ்ரீலங்கா அரச தலைவர்கள் போட்டி போட்டுக் கொண்டிருந்தனர். மகிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க, மைத்திரி பால சிறிசேன என்று கடந்த கால தலை வர்கள் போரில் தமிழ் தரப்பை வென்ற வெற்றிப் பெருமிதத்தைப் பேசியே தமது ஆட்சியைத் தொடர்ந்த நிலையில், கோத்தபாய ராஜபக்சவும் இவ்வாறு பேசி ஆட்சியைப் பிடித்து தொடர்ந்த நிலையில் விடுதலைப் புலிகள் இல்லாமலே வீழ்ந்துள்ளது ஸ்ரீலங்கா.

2018ஆம் ஆண்டில் முல்லைத்தீவு நீதிமன்றம் வெளியிட்ட கட்டளையின் பிரகாரம் அங்கு கட்டட வேலை நிர்மாணப் பணிகள் எதனையும் மேற்கொள்ள முடியாது என்ற நிலையில், நீதிமன்றத்தின் தீர்ப்பை மதிக்காமல் அங்கு ஆக்கிரமிப்பை மேற்கொள்ள ஸ்ரீலங்கா அரசு முயன்றுள்ளது. அத்துடன் கடந்த காலத்தில் கோத்தபாய ராஜபக்ச அரசாங்கத்தின் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க இராணுவப் பாதுகாப்புடன் சென்று அங்கு விகாரைக்கு அடிக்கல் நாட்டினார்.

### தொடரும் இனவழிப்பு

குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய ஆக்கிரமிப்பு முயற்சி தடுக்கப்பட்டபோதும் அங்கு விகாரை குறையளவில் அமைக்கப்பட்டுள்ளது. அதனை அகற்றி தமிழர் பூர்வீகத்தை பாதுகாக்க தமிழ் மக்களின் தலைவர்கள் எனச் சொல்லுவோர் முயற்சிகளை எடுப்பதுடன் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட பன்னாட்டுச் சமூகம் அவதானம் கொண்டு தீர்மானத்தை செயற்படுத்த வேண்டும்.

அத்துடன் இதுபோன்ற பலவழிமுறைகளில் ஈழத் தமிழ் இனம் அழிக்கப்பட்டு வருகின்றது. இதனை தடுத்து நிறுத்த ஐ.நா. உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். யுத்தம் இல்லாமல், கத்தி இல்லாமல், இரத்தம் இல்லாமல் ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளும் இந்த இனவழிப்புப் போரை ஐ.நா இனியும் வேடிக்கை பார்க்கக் கூடாது" என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தலையில் மண்ணை வாரிக்கொட்டிய ராஜபக்ஷ அரசு

-தந்திரீகன்-

‘நுணலும் தன்வாயால் கெடும்’ என்றொரு பழமொழி உண்டு. இது சிறிலங்காவுக்கு அண்மைய காலத்தில் மிகவும் பொருத்தமானதாக மாறிருக்கின்றது. பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் சிறிலங்காவை இத்தனை நாள் வரையில் தாங்கிப் பிடித்துக்கொண்டிருப்பது இந்தியா தான்.

சிறிலங்காவுக்கு இந்தியா உதவுவதில் பல காரணங்கள் உள்ளன. குறிப்பாக தன்னை நோக்கிய நலன்களே அதிகமாக உள்ளன. இதுபற்றிய பல வாதப்பிரதிவாதங்கள் இருக்கின்றன.

அவையொருபுமிருக்கையில், கடந்த 17ஆம் திகதி வரையில் சிறிலங்காவின் இயக்கத்திற்கு காரணமாக இருப்பது இந்தியா தான். எரிபொருள், அத்தியாவசியப் பொருட்கள், மருத்துவப் பொருட்கள், உரங்கள் என்று தொன் கணக்கில் இந்தியா சிறிலங்காவுக்கு உதவிகளை அளித்துள்ளது.

அதுமட்மன்றி, தான் வழங்கிய கடன்களுக்கான கால எல்லையையும் இந்தியா நீடிப்புச் செய்யும் அறிவிப்பையும் விடுத்திருப்பதோடு மேலதிகமான கடன்களை வழங்குவது குறித்தும் ஆராய்ந்து வருகின்றது.

குறிப்பாக, அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான மேலதிகமாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களையும், எரிபொருளுக்காக, 500மில்லியன் டொலர்களையும் சிறிலங்கா அரசாங்கம் மேலதிக கடன்களாக இருவேறு சந்தர்பங்களில் கோரியிருக்கின்றது.

இக்கோரிக்கைகள் தொடர்பில் டெல்லி தீவிரமான கவனத்தினை எடுத்திருந்தது. அதுமட்டுமன்றி, இந்தியப் பாராளுமன்றக் குழுவிலும் சிறிலங்கா விவகாரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டும் இருக்கின்றது.

இவ்விதமானதொரு சூழலில் தான் சிறிலங்கா டெல்லிக்கு முகஞ்சுழிப்பை ஏற்படுத்தி இருக்கின்றது. இதனால் டெல்லியின் முக்கிய புள்ளிகள் சீற்றமடைந்திருப்பதாக தகவல்கள் உள்ளன.

இதனால், சிறிலங்காவுக்கான அவரச உதவிகளை வழங்கும் செயற்பாட்டை சற்று காலம் தாழ்த்தி நகர்த்துவதற்கு டெல்லி தீர்மானித்திருப்பதாகவும் உள்ளகத்தகவல்கள் தெரிவித்திருக்கின்றன.

ஆம், கடந்த 10ஆம் திகதி, மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்க தீர்மானிக்கப்பட்டமைக்கான காரணம் தொடர்பில் கோப் என்று அழைக்கப்படும் பாராளுமன்ற பொது முயற்சியாண்மைக்கானக் குழுவில் கருத்துதொன்று வெளியிடப்பட்டது.

குறித்த கூட்டத்தில், மன்னாரில் காற்றாலை மின்னுற்பத்தி செயற்றிட்டத்திற்காக இந்தியாவின் அதானி நிறுவனத்தை தெரிவு செய்த விதம் குறித்து, இலங்கை மின்சார சபையிடம கேள்வி எழுப்பப்பட்டது.

இதன்போது, கடந்த நவம்பர் மாதம் 24 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னை அழைத்து மன்னார் காற்றாலை செயற்றிட்டத்தை அதானி நிறுவனத்திடம் வழங்குமாறு தெரிவித்ததாக இலங்கை மின்சார சபையின் தலைவர் பெர்டினான்டோ குறிப்பிட்டார்.

அத்துடன் அவர் நிறுத்தவில்லை, பாரத பிரதமர் மோடி, குறித்த செயற்றிடம் தொடர்பில் நேரடியாக தலையீடு செய்து ஜனாதிபதி கோட்டாபயவுக்கு அழுத்தம் விடுத்ததாகவும் இலங்கை மின்சார சபையின் தலைவர் பெர்டினான்டோ குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை மின்சார சபையின் தலைவர் பெர்டினான்டோ நன்கறிந்து இந்தக் கருத்துக்களை கூறினாரா இல்லை தவறுதாலாக கூறினாரா என்று சிந்திப்பதற்கும் அதன் தாக்கம் வெளிப்பட ஆரம்பித்து விட்டது.

ஏனென்றால், இலங்கை மின்சார சபையின் தலைவர் பெர்டினான்டோவின் கருத்துக்கள் சிறிலங்கா, இந்தியா உறவுகளுடன் தொடர்புபட்டவை. நாட்டின் இறைமையுடன் தொடர்பு பட்டவை.

அதுமட்டுமன்றி, போர் வெற்றிவாதத்தில் ஆட்சி அதிகாரத்தினைக் கைப்பற்றிய ஜனாதிபதி கோட்டாபய இந்தியாவுக்கு அடிபணிந்து விட்டார் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்திவிடும் ஆபத்து நிறைந்த கருத்துக்களாகவும் இவை காணப்பட்டன.

இதனால் சிறிலங்காவினுள் இந்தக் கருத்துக்கள் மிகவும் பாரதூரமாக அமைந்துவிட்டன. இதுவொருபுறமிருக்கையில், இக் கருத்துக்கள் சிறிலங்காவிற்கு அப்பாலும் தாக்கத்தினை ஏற்படுத்தி விட்டன.

குறிப்பாக, காங்கிரஸின் ராகுல் காந்தி, இக்கருத்துக்களை தனது அரசியலுக்கு முறையாக பயன்படுத்தி விட்டார். ஊழல்மோசடி விவகாரத்தில் விசாரணைக்கு முன்னிலையாகி வரும் ராகுல் காந்தி குறித்தவொரு நாள் விசாரணை முடிந்து வெளியேறும், போது, இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் குளறுபடிகள் தற்போது பாக்கு நீரிணையையும் கடந்து சிறிலங்கா நோக்கி பயணித்துக் கொண்டுள்ளதாக குற்றஞ்சுமத்தினார்.

இதனால், டெல்லி உட்பட இந்தியாவெங்கும் உள்ள பா.ஜா.க.வுக்கு எதிரான தரப்புக்கள் இந்த விடயத்தினை கையில் எடுத்திருந்தன. பிரதமர் மோடிக்கு சாட்டையடி வழங்க ஆரம்பித்தன.



இதனைவிடவும், அண்மைக்கால மதிப்பீடுகளின் படி, அம்பானியை கடந்து அதானி இந்தியப் பணக்காரர்கள் பட்டியலில் முதலிடத்தினை பிடித்துள்ளார். அவ்வாறானதொரு சூழலில் அதானிக்காக பிரதமர் மோடி பரிந்துரைகளைச் செய்கின்றார் என்ற விடயம், இந்திய வர்த்தகர்கள் இடையேயும் பிரதமர் மோடி மீது அதிருப்திகளை உருவாக்கி விட்டது.

பிரதமர் மோடியின் அரசாங்கத்தின் தாங்கு திறன்களாக இருப்பவர்கள், அம்பானி, அதானி, டாட்டா போன்ற வர்த்தகர்கள் என்பது அனைவரும் அறிந்த பகிரங்கமான விடயம்.

அதுமட்டுமன்றி, அதானி குஜராத் பிராந்தியத்தினை சேர்ந்தவர் என்பதால் பிரதமர் மோடி, முதவல்வராக இருந்த காலம் தொட்டே உறவுகளும் உள்ளன. அவ்வாறான நிலையில், பிரதமர் மோடி அதானிக்காக பிரத்தியேகமாக செயற்படுகின்றார் என்பது ஏனையவர்களுக்கு இயல்பாகவே அதிருப்தி ஏற்படுவதற்கு கூடுதல் காரணமாகி விட்டது.

இவ்வாறான நிலையில், சுதாரித்துக்கொண்ட, ஜனாதிபதி கோட்டாபய மன்னார் காற்றாலை திட்டம் தொடர்பான மின்சார சபை தலைவரின் கூற்றை நிராகரிப்பதாக கூறினார். எந்தவொரு குறிப்பிட்ட நபருக்கோ நிறுவனத்திற்கோ அதனை வழங்குவதற்கான அங்கீகாரத்தை தான் அளிக்கவில்லை எனவும் அடித்துக் கூறினார்.

அத்துடன், இலங்கை மின்சார சபையின் தலைவர் பெர்டினான்டோ உடனடியாக பதவியைத் துறந்தார். தான் கூடுதல் அழுத்தங்களின் காரணமாக தடுமாறி அவ்வாறு கூறிவிட்டதாக ‘சமாளிப்பு’ பதிலொன்றை வழங்கினார்.

ஆனால், உள்நாட்டிலும், டெல்லியிலும் நிலைமைகள் மோசமடைந்து விட்டன. கொழும்பில் ஒன்றுகூடிய குறிப்பிட்ட குழுவினர் அதானிக்கு காற்றாலைத் திட்டம் வழங்கப்பட்டமைக்கு எதிராக போர்க்கொடி தூக்கினார்கள்.

இந்திய உயர்ஸ்தானிகரகத்திற்கு முன்னால் தமது கடுமையான கண்டனங்களை வெளியிட்டார்கள். மின்சாரசபை தொழிற்சங்கங்கள் காற்றாலை செயற்றிட்டத்தினை மீள்பரிசீலனை செய்து உள்ளூர் முதலீட்டாளர்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

இந்த நிலைமைகள், புதுப்பிக்க சக்தி திட்டத்தில் முதலீடுகளைச் செய்வதற்கு இணங்கியிருந்த அதானி குழுத்திற்கு அதிருப்தியையும், கவலையையும் ஏற்படுத்திவிட்டது. அதேவேளை அக்குழும் சிறிலங்காவில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள காற்றாலை மின்னுற்பத்தி திட்டம் குறித்து எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் கவலையடைகின்றோம்; என்று உடனடியாகவே பிரதிபலித்தும் விட்டது.

அத்துடன், அயல் நாட்டின் விருப்புக்களின் அடிப்படையில் தான் தமது தீர்மானங்கள் அமையும் என்றொரு கூற்றையும் அதானி குழுமம் வெளிப்படுத்தியது. இது பிரச்சினையாக இருந்தால் நாங்கள் அத்திட்டத்திலிருந்து வெளியேறுவதற்கு தயாராகவே உள்ளோம் என்பதற்கான சமிக்ஞை தான்.

அவ்வாறு அதானி குழுமம் வெளியேறினால், மேலும் நெருக்கடியில் மாட்டிக் கொண்டு தவிக்கப்போவது சிறிலங்கா தான் என்பது சிறுபிள்ளைக்கும் தெரிந்த விடயம். ஆகவே தற்போதுள்ள நெருக்கடிகளால் ஏற்பட்ட தலையிடுகளுக்கு அப்பால் இந்தியாவினை சமாாதானம் செய்தல், அதானியின் முதலீட்டை உறுதிப்படுத்தல் என்று இரட்டைத் தலையிடி அதிகரித்து விட்டது. முறையற்ற வார்த்தைகளை வெளியிட்டமையால் தன் தலையில் மட்டுமல்ல ஒட்டுமொத்த மக்கள் தலையிலும் மண்ணெய் வாரிக்கொட்டியிருக்கின்றது ராஜபக்ஷ அரசு.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com



# ஜெனிவாவில் முரண்டு பிடிக்கும் சிறிலங்கா

-கரிகாலன்-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது கூட்டத்தொடர் 13ஆம் திகதி ஜூன் மாதம் ஆரம்பித்து எதிர்வரும் ஜூலை எட்டாம் திகதி வரையில் நடைபெற்று நிறைவடையவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடர் சிறிலங்காவுக்கு மிகவும் முக்கியமானதொன்றாக இல்லாது விட்டாலும், சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவினர் பங்கேற்றுள்ளனர்.

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான குழுவினர் ஜெனிவா கூட்டத்தொடருக்கு முன்னதாக சிங்கப்பூரில் நடைபெற்ற ஷங்காய் பாதுகாப்புக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

அதில், சிறிலங்காவுக்கு நன்கொடைகளை பெற்றுக் கொள்ளவதற்கான முதற்படிகளை மேற்கொள்ளமுடியும் என்ற பெரு நம்பிக்கையில் பாரிய பின்னடைவுகளுடன் தான் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஜெனிவாவுக்கு பறந்திருந்தார்.

மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தையோ, உயர்ஸ்தானிகர் மிச்சல் பச்லெட் அம்மையாரின் அறிக்கையையோ, கூற்றுக்களையோ, இணை அனுசரணை நாடுகளின் கூட்டு அறிக்கைகளையே கருத்தில் கொள்ளாத சிறிலங்கா அரசாங்கம் இம்முறை ஜெனிவாவுக்கு விரைந்தாக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது.

இறுதிப்போரில் இடம்பற்ற இனப்படுகொலைகளையோ, மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்களையோ முற்றாக மறுதலிக்கும் சிறிலங்கா அரசாங்கம் இம்முறை கூட்டத்தொடரில் வலிந்து தான் பங்கேற்றிருந்தது.

'சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா' சிறிலங்கா அரசாங்கம் இம்முறை கூட்டத்தொடரில் பங்கேற்றமைக்கு காரணங்கள் இல்லாமலில்லை.

அதில் முதலாவது, அடுத்து வருகின்ற 51ஆவது கூட்டத்தொடரில் உயர்ஸ்தானிகரின் சிறிலங்கா குறித்த அறிக்கை சமர்பிக்கப்படவுள்ளது. இதில் சிறிலங்கா தொடர்பில் காட்டமான விடயங்கள் சுட்டிக்காட்டப்படலாம் என்ற அச்சம் அரசாங்கத்துக்கு உள்ளது.

குறிப்பாக, கடந்த மே 9இல் காலிமுகத்திடலில் அரங்கேற்றிய வன்முறைகளே ராஜபக்ஷக்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு போதுமான சாட்சிகளாக அமைந்து விடும் என்ற அச்சம் உள்ளது.

இம்முறை கூட்டத்தொடரின் போதே அவ்விடயம் சில சிவில் அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த நிலையில், அடுத்த கூட்டத்தொடருக்குள் அவ்விடயம் வலுவானதாக மாறிவிடும் என்பதே சிறிலங்கா அரசாங்கத்தின் அச்சத்துக்கு காரணமாகும்.

இரண்டாவது, பொறுப்புக்கூறலை தொடர்ச்சியாக மறுதலிக்க வேண்டிய தேவைகள் காணப்படுகின்றன. ஒரு கூட்டத்தொடரில் அதுபற்றி பேசாது விடும் பட்சத்தில் எதிர்காலத்தில் அதற்கான வலியுறுத்தல்கள் தீவிரமடைவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமுள்ளன.

ஆகவே, வழமை போன்றே பொறுப்புக்கூறலை மலினப்படுத்துவதற்கு, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 22 பேர் மார்ச் மாதத்துக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டிருப்பதாகவும், தடை செய்யப்பட்ட புலம்பெயர் தமிழர்கள் மற்றும் அமைப்புகளின் பட்டியல் மீளாய்வு செய்யப்பட்டு, 318 தனிநபர்கள், 4 அமைப்புகளின் மீதான தடைகளை நீக்குவதற்கு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருப்பதாகவும், இந்த மீளாய்வு செயல்முறை தொடருவதாகவும் அமைச்சர் பீரிஸ் அவிழ்த்து விட்டிருக்கின்றார்.

அத்துடன், ஐ.நா.உரிமைகள் பேரவையின் சிறிலங்கா குறித்த இறுதித் தீர்மானத்தில் பொறுப்புக்கூறல், நீதி, நல்லிணக்கத்துக்கான பொறிமுறைகள், செயல்முறைகளுக்காக, சாட்சியங்களைத் திரட்டும் வெளியகப் பொறிமுறையை உருவாக்கியிருக்கிறது. இதனை சிறிலங்கா அரசாங்கம் நிராகரித்திருந்தது.

தற்போதும், எந்தவிதமான காரணங்களுமின்றி அந்த தீர்மானத்தினை மீண்டும் நிராகரித்து விட்டு வலிந்து காணமலாக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகம், இழப்பீட்டு பணியகம் உள்ளிட்ட விடயங்களை முன்னெடுப்பதாகவும், நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்வதாகவும் அமைச்சர் பீரிஸ் ஆடம்பரமாக கூறியிருக்கின்றார்.

இது 'முழுப்பூசனியை சோற்றுக்குள் மறைத்து' பொறுப்புக் கூறலில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கான வழியொன்று தான். இதனையே கடந்த காலத்திலும் சிறிலங்கா அரசாங்கம் செய்தது. தற்போது அதனை தொடர்ந்து வருகின்றது. அத்துடன், உள்ளகப் பொறிமுறையையும் அமைச்சர் பீரிஸ் வலியுறுத்தியுள்ளார். இதுவும் வழமையானதொன்று தான்.

மூன்றாவதாக, சிறிலங்காவில் தற்போது காணப்படும் பொருளாதார நெருக்கடிகளை காரணம் காட்டி, பொறுப்புக்கூறல் மற்றும் சிறிலங்கா தொடர்பில் கட்டமான விடயங்களை உள்ளடக்கிய அறிக்கையை மலினப்படுத்தல் ஆகிய விடயங்களை நகர்த்துவதற்கும் அமைச்சர் பீரிஸ் முயன்றிருக்கின்றார்.



குறிப்பாக, பொருளாதார நெருக்கடிக்குள், பொறுப்புக்கூறல் விடயங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது என்று சமாளித்து அதிலிருந்து முற்றுமுழுதாகவே வெளியேறுவதற்கு முயற்சிகளை எடுத்திருக்கின்றர்.

இந்த அடிப்படையில் ஜெனிவாக் கூட்டத்தொடரில் பங்கேற்ற அமைச்சர் பீரிஸ் உயர் ஸ்தானிகரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். அவருடனான சந்திப்பில் சிறிலங்கா வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுவதாக பிரஸ்தாபித்து உள்ளார்.

இதனைவிடவும் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளையும் பக்க நிகழ்வுகளில் சந்தித்து கலந்துரையாடி வருகின்றார். அந்தக் கலந்துரையாடல்கள் அனைத்தும் பொறுப்புக்கூறல், நீதிவழங்கல் பற்றியானது அல்ல, தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார அரசியல் ஸ்திரமற்ற நிலைமைகள் பற்றியானதும் அல்ல.

அவை எல்லாமே, பொருளாதார ரீதியாக வீழ்ந்து கிடக்கும் சிறிலங்காவை தூக்கி நிறுத்துவதற்கானவையாகவே அமைந்திருந்தன. ஆனால் அதில் வெற்றியளித்த பேச்சு வார்த்தைகள் என்று எவையும் கிடையாது.

இவ்வாறிருக்கையில், அமைச்சர் பீரிஸ் தொடர்ச்சியாக பொறுப்புக்கூறலில் இருந்து சிறிலங்காவை பிணையெடுக்கும் செயற்பாட்டையே முன்னெடுத்து வருகின்றார்.

முன்னதாக, 22 நாடுகள் ஆதரவாகவும், 11 நாடுகள் எதிராகவும் வாக்களித்தே 46.1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும் அதனை பேரவையின் உறுப்புநாடுகள் முழுவதும் ஆதரிக்கவில்லை. அதனால் அந்த தீர்மானத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அர்த்தம் கற்பித்தார் அமைச்சர் பீரிஸ்.

ஆனாலும், பொறுப்புக்கூறல், நீதி வழங்கலில் இருந்து முழுமையாக விலகி நிற்பதற்கு தற்போதைய பொருளாதார நெருக்கடியான நிலைமைகளையும் பயன்படுத்துவதற்கு விளைந்திருந்தார்.

துரதிஷ்டவசமாக அமைச்சர் பீரிஸின் பிணையெடுக்கும் கருத்துக்களை முழுமையாக நம்புவதற்கு ஐ.நா பேரவையோ, உயர்ஜஸ்தானிகரோ அல்லது, ஏனைய சிரேஷ் உறுப்பினர்களே முழுமையாக ஏற்றுக்கொண்டதாக இல்லை.

அதேநேரம், குறித்த தரப்புக்களில் உயர்ஸ்தானிகர் மிச்சல் பச்லெட் சிறிலங்காவுக்கு பொருளாதார நெருக்கடிகளுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குமாறு கோரியதோடு, அமைச்சர் பீரிஸால் சிறிலங்காவுக்கு விஜயம் செய்யுமாறு விடுக்கப்பட்ட அழைப்பையும் நிராகரிக்காது உயர்ஸ்தானிகர் அமைதியாக இருந்து விட்டார்.

அமைச்சர் பீரிஸின் இவ்விதமான செயற்பாடுகள் எல்லாமே நழுவல் போக்குடையவை. மறாக இதய சுத்தியானவை அல்ல. இந்த விடயத்தில் அமைச்சர் பீரிஸ், அவர் பங்கேற்றுள்ள ராஜபக்ஷகள் மட்டுமல்ல முன்னர் பதவியில் இருந்த மைத்திரி-ரணில் கூட வேறுபாடுகளின்றே இருக்கின்றனர்.

ஆனால் மைத்திரி-ரணில் ஆட்சியில், பொதுநலவாய மற்றும் நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்குத் தொடுநர்களை உள்ளடக்கிய கலப்பு விசாரணைப் பொறிமுறைக்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்தது. பின்னர் அதுபற்றிய பேச்சையே எடுக்காது கிடப்பில் போட்டு மெல்ல நீர்த்துப்போகச் செய்தது.

ஐ.நா விடத்தில் ராஜபக்ஷ தரப்புக்கள் நெஞ்சில் குத்துபவர்கள் என்றால், ரணில் போன்ற தரப்புக்கள் முதுகில் குத்துபவர்களாகவே உள்ளனர்.

இப்போது நெஞ்சில் குத்துபவர்களும், முதுகில் குத்துபவர்களும் ஒன்றிணைந்து விட்டனர். ஆனால் ஏற்கனவே இனவழிப்புக்கு உள்ளாகி நீதி கேட்டு போராடும் பாதிக்கப்பட்ட மக்கள் மேற்படி இருதரப்பினராலும் மேலும் பாதிக்கப்பட்டு இப்போதும் நீதிக்காக போராடுகின்றார்கள்.

இந்த போராட்டம் குறித்த புரிதல் சர்வதேச சமூகத்திற்கு அவசியமாகின்றது. ஆனால், சிறிலங்காவின் பொறுப்புக்கூறல் பிரேணைக்கு இணை அனுசரணை வழங்கிய பிரித்தானிய தலைமையிலான நாடுகள், பொத்தாம் பொதுவாக, 'அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீதான வன்முறை தாக்குதல் குறித்தும் அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் ஆதரவாளர்கள் மீதான வன்முறைகள் குறித்தும் நாங்கள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம்.

இந்த வன்முறைகளிற்கு காரணமானவர்கள் பொறுப்புக் கூறச்செய்யப்படவேண்டும். ஜனநாயகம்,மனித உரிமைகள் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை உறுதிப்படுத்தவேண்டியதன் சுயாதீன ஸ்தாபனங்களை பேணவேண்டியதன் அவசியத்தை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

நீண்டகாலமாக காணப்படும் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதல் ஊழல் ஆகியவற்றிற்கு தீர்வை காணுமாறும், நல்லாட்சி மற்றும் சிறந்த பொருளாதார கொள்கைகளை முன்னிலைப்படுத்துமாறும்ஆட்சியாளர்களை கேட்டுக்கொள்கின்றோம். ஐ.நாவின் பொறுப்புக்கூறல் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்குமாறு கோருகின்றறோம்' என்ற கூற்றுக்களுக்கு அப்பால் பாதிக்கப்பட்ட மக்கள் சார்ந்து அழுத்தங்களை சிறிலங்கா மீது பிரயோகிக் வேண்டியது கட்டாயமாகின்றது.





# 'முதல் பட்டினிச்சாவு மலையகத்தில் பதிவாகும்'

-ச.பார்த்தீபன்-

மலையக பெருந்தோட்ட மக்களுக்கு விசேட பொருள் விநியோக வழிமுறையும் நிவாரண திட்டமும் முன்வைக்கப்பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் கடந்த வார இறுதியில் தெரிவித்திருந்தார்.

"இன்று இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. எரிபொருட்களின் தட்டுப்பாடு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. எரிபொருட்களை பெறுவதற்கான வரிசைகளும் பல கிலோமீட்டர் வரை நீண்டு செல்வதோடு எரிபொருட்களை பெற பல நாட்கள் தொடர்ந்து வரிசைகளில் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்நிலைமை நாட்டின் அனைத்து துறைகளின் செயற்பாட்டையும் ஸ்தம்பிதம் அடைய செய்திருக்கின்றது. இந்த சூழ்நிலையில் உடனடியாக மலையக மக்களுக்கு விசேட பொருள் விநியோக வழிமுறையும் நிவாரண திட்டமும் முன்வைக்கப்பட வேண்டும். மலையகங்களில் வேலை நாட்களும் நாளுக்கு நாள் குறைவடைந்து வருகின்றது. மலையகங்களில் இருந்து வெளி நகர் புறங்களில் வேலை செய்தவர்கள் வேலை வாய்ப்புக்களை இழந்துள்ளனர். போக்குவரத்து நெருக்கடியினால் வெளி இடங்களில் சென்று வேலைகளை செய்வதற்கும் முடியாது இருக்கின்றது. மறுபுறம் பொருட்களின் விலை பல மடங்கு அதிகரித்திருக்கிறது. பொருள் தட்டுப்பாடு மிக மோசமான நிலையில் உள்ளது. இவ்வாறான சூழலில் மலையக மக்களை பாதுகாக்க விசேடமான நிவாரண திட்டமொன்று உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும்." என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை பஞ்சத்திற்கு நிகராண பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் இலங்கையில் பஞ்சம் ஏற்படலாம் என்ற எதிர்வு கூறல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறான நிலையில் இரு நூற்றாண்டுகளாய் அன்றாட உணவைப் பெற்றுக்கொள்வதற்குக்கூட பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கி வரும் இந்த பெருந்தோட்ட மக்கள் இலங்கையின் பொருளாதாரத்தின் பாரிய வீழ்ச்சியால் மேலும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

உலக உணவுத் திட்டத்தின் அண்மையை அறிக்கைக்கு அமைய போஷாக்குக் குறைப்பாட்டால் இலங்கையில் 1.7 மில்லியன் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களில் பெரும்பாலானவர்கள் மலையக பெருந்தோட்டப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட சிறுவர்களின் மிகப்பிரதான ஊட்டச்சத்து குறைநிரப்பு உணவான திரிபோஷ கடந்த வருட இறுதியில் இருந்து வழங்கப்படுவதில்லை. இதுவும் இந்த குறைபோஷன நிலைமைக்கு முக்கிய காரணியாக அமைந்துள்ளது.

ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வழங்கியதாக முன்னைய கோட்டா அரசாங்கம் அடங்கிய நாடகத்தால் இருந்த வருமானத்தையும் அந்த மக்கள் இழந்துள்ளனர். குறிப்பாக குறை வருமானம் பெறுபவர்கள் தமது உணவு தேவையை கூட பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இச் சூழ்நிலையில் அரசாங்கம் விசேட நிவாரணங்களை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதை வேலுகுமார் எம்.பி சுட்டிக்காட்டியிருந்தார். இது அவரது கோரிக்கை மாத்திரமல்ல ஒட்டுமொத்த பெருந்தோட்ட மக்களின் கோரிக்கையும் அதுவாகத்தான் காணப்படுகின்றது.

**மலையகங்களில் இருந்து வெளி நகர் புறங்களில் வேலை செய்தவர்கள் வேலை வாய்ப்புக்களை இழந்துள்ளனர். போக்குவரத்து நெருக்கடியினால் வெளி இடங்களில் சென்று வேலைகளை செய்வதற்கும் முடியாது இருக்கின்றது. மறுபுறம் பொருட்களின் விலை பல மடங்கு அதிகரித்திருக்கிறது. பொருள் தட்டுப்பாடு மிக மோசமான நிலையில் உள்ளது. இவ்வாறான சூழலில் மலையக மக்களை பாதுகாக்க விசேடமான நிவாரண திட்டமொன்று உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.**

கடந்த காலங்களில் இத்தகைய நிவாரணங்களை வழங்கும் போது, மலையக மக்களுக்கு பாராபட்சம் காட்டப்பட்டது. இந்நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கு அனைத்து மலையக கட்சிகளும் ஒன்றிணைந்து, மலையக மக்களுக்கு நிவாரண பொருட்கள் மற்றும் உதவிகள் பாரபட்சமின்றி கிடைப்பதற்குரிய முறைமை ஒன்றை முன்வைக்க வேண்டும். காரணம், கடந்த காலத்தில் கொவிட் 19 நிவாரண வழங்களில் மலையகம் எங்கும் பாராபட்சம் காட்டப்பட்டது. ரூபா 5,000 கொடுப்பனவில் பாரிய சிக்கல்கள் எழுந்தன. சில பிரதேசங்களில் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் ஓரம்கட்டப்பட்டனர். அத்தோடு ஒரு வீட்டில் அல்லது ஒரு லயன் அறையில் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனர். அவர்கள் ஒரு அலகிற்குள் இருந்தாலும், தனிப்பட்ட குடும்பங்களாகவே தமது தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர். அவ்வாறான துணை குடும்பங்கள் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டன என்பதே யதார்த்தம்.

அதனைவிட தமிழகம் வழங்கிய நிவாரணப் பொருட்கள் பெருந்தோட்டத்தில் பணியாற்றும் மக்களுக்கு மாத்திரமே வழங்கப்படும் என கிராமசேவகர்கள் தெரிவிப்பதாக ஒரு குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதில் நியாயமில்லாமல் இல்லை, எனினும் அரசாங்கத்தின் சேதனப் பசளைத் திட்டத்தில் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் வாழ்வாதாரத்தை இழுந்மது தவிக்கும் மக்கள் தொடர்பிலும் அவதானம் அரசாங்கமும், குறிப்பாக கிராம சேவகர்களும் சிந்தித்து பணியாற்ற வேண்டும்.

அது மாத்திரமன்றி மலையகத்தின் பெரும்பாலான இளைஞர் யுவதிகளுக்கு வாழ்வளித்த ஆடை உற்பத்தி தொழில்துறை, மின்வெட்டு, மூலப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் பல்லாயிரக்கணக்கானவர்கள் தமது தொழிலை இழந்துள்ளனர். ஆகவே ஏதோ ஒரு வகையில் தமது பெற்றோருக்கும் குடும்பத்திற்கும் பொருளாதார ரீதியாக உதவியவர்கள் இன்று தொழில் இன்றி வாடுகின்றனர். அதனைவிட நகைக்கடைகள், ஹோட்டல் உள்ளிட்டவற்றில் பணியாற்றியவர்கள் தொழிலை இழந்துள்ளனர் அல்லது குறைந்த சம்பளத்திற்கு பணியாற்றுகின்றனர்.

வாழ்க்கைச் செலவு பண்மடங்கு அதிகரித்துள்ள நிலையில், வருமானம் பாதியாக குறைவடைந்துள்ள மலையக பெருந்தோட்ட மக்களுக்கு பாரபட்சமின்றி நிவாரணங்கள் கிடைக்கப்பெற்ற வேண்டும். அதற்கு தகுந்த வழிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

அதற்கான கலந்துரையாடலை மற்றும் செயற்பாடுகளை அரசாங்கமும் அரச அதிகாரிகளும் மேற்கொள்ள வேண்டும். சமூகத்தில் பல்வேறு தரப்பினர்களையும் ஒன்றிணைத்து, இச் செயற்பாட்டை மேற்கொள்வது பொருத்தமாக அமையும். அதனை உடனடியாக செய்ய வேண்டி அவசியம் ஏற்பட்டுள்ளது. இல்லையேல் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்ததுபோல் "பட்டினியால் பலியாகும் முதல் உயிர் மலையகத்தில் பதிவாகும்" என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

‘ரணிலைப் பிரதமராக்கி, நிலைமைகளை சுதாகரித்த ராஜபக்ஷக்கள் மெல்ல மெல்ல அரசியல் செயற்பாடுகளுக்குள் காலடியெடுத்து வைக்கின்றனர்’

# ரணில் ‘ராஜபக்ஷ’



-தேசிகன்-

‘கோட்டா கோ கோம்’, ‘மைனா கோ கோம்’ போராட்டங்கள் தீவிரமடைந்த நிலையில் ராஜபக்ஷக்கள் சிறிலங்கா அமைச்சரவையில் இருந்து வெளியேறியிருந்தனர்.

அதில், மே-9 வன்முறைகளுக்குப் பின்னர் பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியிருந்தார். நாடாளுமன்ற உறுப்பினராக, எதிர்க்கட்சித்தலைவராக, பிரதமராக, ஜனாதிபதியாக பல பதவிகளை வகித்தவர் மஹிந்த.

ஆனாலும், இறுதியாக வகித்த பிரதமர் பதவியை துறந்துவிட்ட அவர் அமைதியாகச் செல்லவில்லை. வன்முறைகளை அரங்கேற்றி ஒட்டுமொத்த நாட்டையும் கலவரபூமியாக்கிவிட்டே திருகோணமலை படை முகாமில் ஒழிந்து கொண்டார்.

நாட்டில் நிரந்தரமான அமைதியை விரும்புபவர், பதவிகளுக்கு ஆசை இல்லாதவர் என்றால் இவ்விதமாக ஏன் நடந்து கொள்ள வேண்டும் என்ற கேள்விக்கு மஹிந்த பதிலளிப்பதற்கு தலைப்பட்டிருக்கின்றார்.

எவ்வாறியினும், மைனா கோ கோம் போராட்டம் மஹிந்த பிரதமர் பதவி துறப்புடன் வெற்றி பெற்ற நிலையில் தற்போது ‘கோட்டா கோ கோம்’ போராட்டம் நீடிக்கின்றது.

இந்தப் போராட்டம், பிரதமராக ரணில் பதவியேற்றவுடன் சற்று வலுக்குன்றியிருந்தது. ஆனாலும் அண்மைய நாட்களில் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியமான பொருட்களுக்கான நெருக்கடிகளால் மீண்டும் துளிர்த்திருக்கின்றது.

போராட்டம் மீண்டும் துளிர்த்தாலும், வீச்சடைந்தாலும், ஜனாதிபதியாக இருக்கும் கோட்டாபய தான் வீட்டுக்குச் செல்லப்போவதில்லை என்பதை திட்டவட்டமாக அறிவித்து விட்டார்.

அவருடைய, தனிப்பட்ட இல்லமான மிரிஹாண இல்லமும், செயற்பாட்டு அலுவலகமான ஜனாதிபதி செயலகமும் முடக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது ஜனாதிபதி மாளிகையில் இருந்து செயற்பட ஆரம்பித்திருக்கின்றார்.

அவரைப்பொறுத்தவரையில், தனக்கு இன்னமும் 69 இலட்சம் மக்களின் ஆணை இருக்கின்றது என்பது தான் வாதமாகவுள்ளது. ஆனால் அன்றாடாம் 69 இலட்சம் மக்களுக்கும் அதிகமானவர்கள் வீதிகளில் வாடிக்கொண்டிருக்கின்றார்கள் என்பது பற்றி அவர் கவலைப்படுவதாக தெரியவில்லை.

பொதுமக்களை ‘தியாகம்’ செய்யுங்கள் என்றே இன்னமும் கூறுகின்றார். பொதுமக்களிடத்தில் தற்போதைய நிலையில் தியாகம் செய்வதற்கு ‘உயிர்கள்’ மட்டுமே உள்ளன. ஏனைய அனைத்தையும் அவர்கள் ஏற்கனவே தியாகம் செய்தாகிவிட்டது.

ஆனால், இதனை உணராத கோட்டாபய, தற்போது தான் நிலைமைகளை சமாளித்து விட்டதாகவே கருதிக்கொண்டிருக்கின்றார். அதாவது, பிரதமராக ரணிலை நியமித்து, அமைச்சரவையை மாற்றியமைத்து விட்டதால் தனது பணி முடிவடைந்து விட்டது என்றே கருதுகின்றார்.

அடுத்து வருகின்ற பிரச்சினைகளுக்கு எல்லாம் பதிலளிக்க வேண்டியவர் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள ரணில் தான் என்ற நிலைப்பாட்டிலேயே கோட்டாபய உள்ளார்.

பொறுப்புக்கூறல் விடயத்தில், ஒட்டுமொத்த ராஜபக்ஷக்களும், நழுவிக் கொள்வதில் வல்லவர்கள் தான். இதனை தமிழ் மக்கள் ஏற்கனவே உணர்ந்திருக்கின்றார்கள். தற்போது தான் தென்னிலங்கை மக்கள் உணருகின்றார்கள்.

இவ்வாறிருக்க, தனது சகேதாரர்களின் பதவிகளை பறித்தமையை தனது வாழ்க்கையில் எடுத்த கடினமான முடிவாகவே வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றார். ஆகவே எதிர்காலத்தில் தனது கடினமான தீர்மானத்திற்கு பிராயச்சித்தம் தேடுவதற்கே முனைவார் என்பதில் சந்தேகமில்லை.

அதற்கான மூலோபாயமாகவே ரணில் விக்கிரமசிங்கவை ராஜபக்ஷக்கள் பயன்படுத்தியுள்ளனர். இதனால் தான், ரணில் விக்கிரமசிங்கவின் பதவியேற்பானது ராஜபக்ஷகளை பாதுகாப்பதற்கானது என்று பல தரப்பினரும் முன்னரே கூறியிருந்தனர்.

குறிப்பாக, ‘ரணில் ராஜபக்ஷ’ என்று பலர் கேலியாக கூறியதன் பொருள் ரணில் நாட்டைமீட்கின்றாரோ இல்லையோ ராஜபக்ஷக்களை மீட்டு விடுவார் என்ற அச்சம் அனைவருக்கும் இருந்தது. தற்போதும் இருக்கின்றது.

ஆனால் ரணிலைப் பொறுத்தவரையில், தனது தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி அழிந்து விடுவதை விரும்பவில்லை. ஆகவே தனக்கு வழங்கப்படும் பிரதமர் பதவியை தனது கட்சியையும், தன்னையும் பலமான மீள் அரசியல் பிரவேசத்திற்கான துருப்புச் சீட்டாக பயன்படுத்தவே திட்மிட்டிருந்தார்.

பதவியேற்றவுடனேயே அவர் அதனை கனகச்சிதமாக முன்னெடுத்தும் வருகின்றார். அதாவது, தனது நெருங்கியவர்களான சாகல, அகில, வஜிர, ருவான், போன்றவர்களை அமைச்சுக்கள், திணைக்களங்களை கண்காணிக்கும் பொறுப்பை ஒப்படைத்து விட்டார்.

இது, கோட்டாபய தலைமையிலான நிருவாகத்திற்கு சமாந்தரமாக, பிரதமர் ரணில் தலைமையில் வரையப்பட்டுள்ள நிர்வாகக் கோடாகவே உள்ளது. இதானால் அரச அதிகாரிகள் யாருடைய உத்தரவில் செயற்படுவது என்று திணறிக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலைமையால், நாட்டின் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கான ஆரோக்கியமான நிலைமைகள் அகன்று முரண்பாட்டு நிலைமைகளே அதிகமாக தோற்றம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

மேலும், ரணிலிடத்தில் எந்த அதிகாரங்களும் இல்லை. ஜனாதிபதி கோட்டாபயவிடத்திலேயே தற்போது வரையில் அதிகாரங்கள் உள்ளன. இதனை குறைப்பதற்கு உத்தேச 21ஆவது திருத்தச்சட்ட மூலம் கொண்டு வரப்படவுள்ளதாக கூறப்பட்டு மூன்று வாராங்களாகியுள்ள போதும் அதனை முன்னகர்த்த முடியாது தடுமாறுகின்றார் ரணில்.

ஒருவேளை, அமைச்சரவையின் அனுமதியை அந்த உத்தேச திருச்சட்ட மூலம் பெற்றாலும் அதனை நிறைவேற்றுவதற்கு, பொதுஜனபெரமுன இணங்குமா என்பது தான் பிரதான கேள்வி. ஏனென்றால், பஷில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைக் கூட கைவிட்டுள்ள நிலையில், கோட்டாவின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போடவே விளைவார் என்பது வெளிப்படை.

இந்தப் பின்னணியில் தான், நாட்டு மக்களுக்கு உரையாற்றிய கோட்டாபய, தனது தறுகளுக்கு மன்னிப்புக் கேட்பதற்கு பதிலாக, தான் தோல்வி அடைந்த ஜனாதிபதியாக வீடு செல்லப்போவதில்லை என்றும், எஞ்சிய இரண்டரை வருடங்களில் மீண்டும் வெற்றி பெற்றுவிடுவேன் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறிருக்க, ரணில், ராஜபக்ஷக்களை காப்பாற்றி விடுவார் என்ற கருத்து அவர் பதவியேற்று மாதமொன்று கடந்துள்ள நிலையில் மெல்லமெல்ல உறுதிப்பட ஆரம்பித்திருக்கின்றது. பொருளாதார ரீதியாக எவ்விதமான பாரியவிலான மாற்றங்களை ரணிலால் செய்திருக்க முடிவில்லை.

பொருளாதார நெருக்கடிகளின் ஆழத்தினை மட்டுமே அறிக்கைகளாக விட்டுக்கொண்டிருக்கும் ரணில், ஒட்டுமொத்த நாட்டையும் பதற்றத்துக்குள்ளேயே வைத்துக்கொண்டிருக்கின்றார். இது சிலவேளை, ராஜபக்ஷக்களுக்கு எதிரான மக்களின் மனோநிலை சிதைந்து விடக்கூடாது என்பதற்கான உத்தியாக இருக்கலாம்.

ஆனால், நாட்டில் மக்களின் வயிற்றுப்பசியைப் போக்குவதற்கு கூட இயலுமை அற்ற கையறு நிலையை தான் அடைந்து விட்டேன் என்பதை ரணில் உணர்ந்து கொண்டுள்ளாரா என்பது தெரியவில்லை.

இதற்குள், இம்மாதத்தின் இரண்டாம் வாரத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷவும் பங்கேற்றிருந்ததாக அமைச்சரவைப் பேச்சாளரான பந்துல குணவர்த்தன பகிரங்கமாகவே கூறினார். ஆனால், விழுந்தடித்துக்கொண்டு, மஹிந்தவின் புதல்வாரன நாமல், தனது தந்தை பதவி விலகியதன் பின்னர் எங்குமே செல்லவில்லை என்று வாதம் செய்கின்றார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்ற, அமைச்சரவையின் உத்தியோகப் பேச்சாளரான பந்துல மஹிந்தவின் பங்கேற்பை உறுதிப்படுத்தியபோதும் மஹிந்தவின் புதல்வர் அதனை மறுதலிக்கின்றார். இந்த முரண்பாட்டு நிலைமை ஒருபுறமிருக்கையில் இதில் யார் கூறுவது உண்மை என்பதே முக்கிய விடயமாகின்றது.

அதேநேரம், வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர 18ஆம் திகதி நடத்திய முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கத்துடனான சந்திப்பின்போது, நாமல் ராஜபக்ஷவும் பங்கேற்றுள்ளார்.


இவர் எந்த அடிப்படையில் அச்சங்கத்துடனான கூட்டத்தில் பங்கேற்றார். அமைச்சர் காஞ்சன தனது அணியில் உள்ளவர் என்ற அடிப்படையில் தான் நாமல் பங்கேற்றார். அத்துடன், முச்சகரவண்டி உரிமையாளர்களை கைக்குள் வைத்திருப்பது தனது அடுத்த அரசியல் பயணத்திற்கும் துணையாக இருக்கும் என்ற நாமலின் சுய நலனும் அதில் உள்ளது.

இதேநேரம், ராஜபக்ஷ குடும்பத்தில் மூத்தவரான, சமல், தனது நாடாளுமன்ற உரையில் கடுமையாக மஹிந்தவை விமர்சித்ததோடு அடுத்த கட்டமாக அரசியலில் இருந்து விலகுவதற்கு தீர்மானத்திருந்தார்.

ஆனால், அவரது புதல்வாரன சஷீந்திரவுக்கு அமைச்சரவையில் இடம்கிடைக்கமையால் புதல்வரின் அரசியல் எதிர்காலத்தினை உறுதிப்படுத்தும் வரையில் அமைதி காக்கின்றார்.

இவ்வாறு, ராஜபக்ஷகள், பிரதமராக, ரணிலை நியமித்து விட்டு, அவர் கையிலேயே நாட்டின் எதிர்காலம் இருப்பதாக கூறிவிட்டு, தமது எதிர்கால அரசியல் இருப்புக்களுக்கான நகர்வுகளை ஆரம்பித்து விட்டனர்.

ஆகவே, ‘ரணில் விக்கிரமசிங்க’வை , ‘ரணில் ராஜபக்ஷ’ என்று கூறுவதில் தற்போதைக்கு தவறேதும் இல்லையே!



# சாதனையும் வேதனையும்

**-பூமிகன்-**

ஐரோப்பிய கண்டத்தில் பெருநிலப் பரப்பையும், ஏனைய கண்டங்களில் நிருவாக பகுதிகளையும் கொண்ட நாடு தான் பிரான்ஸ். பிரித்தானியா, ஜேர்மனி போன்ற பாரம்பரிய வரலாற்றைக் கொண்ட நாடுகளைப் போன்றே பிரான்ஸூக்கும் தனித்துவமான வரலாறு உண்டு.

ஐரோப்பிய கண்டத்தில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகிலும் தனக்கென்ற தனித்துவத்தினைக் கொண்டுள்ள பிரான்ஸில் தற்போது வரலாற்று மாற்றமொன்று நிகழ்ந்திருக்கின்றது.

பிரான்ஸில் ஜனாதிபதியாக தெரிவாகும் ஒருவர் ஐம்பது சதவீதமான வாக்குகளைப் பெற வேண்டும். அந்த வகையில் இந்த ஆண்டின் ஏப்ரல் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றிருந்தது.

ஜனாதிபதி தேர்தலுக்கான முதற் கட்ட வாக்குப்பதிவின்போது தேர்தல் களத்தில் கடும் போட்டியிலிருந்த இம்மானு வெல் மக்ரோனாலேயோ, மரைன் லுபென்னாலேயோ வெற்றிக்கான இலக்கை தொட்டிருக்க முடிந்திருக்கவில்லை.

முதற்கட்ட வாக்குப் பதிவின் முடிவில் மக்ரோன் 27.85சதவீதமான வாக்குகளையும் மரைன் லு பென் 23.15சதவீதமான வாக்குகளையும் பெற்றனர். இதையடுத்து ஜனாதிபதி தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு ஏப்ரல் 24ஆம் திகதி நடைபெற்றிருந்தது.

இதில் மக்ரோன் 58 சதவீதமான வாக்குகளைப் பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட மரின் லு பென் வெறும் 42 சதவீதமான வாக்குகளை மட்டுமே பெற்றார். இதனால் மக்ரோன் வெற்றிபெற்றார்.

மக்ரோன் வெற்றி பெற்றதன் மூலம் இரண்டாவது தடவையாகவும், ஜனாதி-பதி தேர்தலில் வெற்றி பெற்ற இளம் தலைவர் என்ற வரலாற்றுப் பதிவைச் செய்து கொண்டார். அதுமட்டுமன்றி பிரான்ஸில் கடந்த இருபது ஆண்டுகளில் இரண்டாவது தடவை வெற்றி பெற்ற முதல் தலைவராகவும் காணப்பட்டார்.

அதுமட்டுமன்றி, கடந்த 2017 நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலிலும் கூட இவர்கள் இருவருக்கும் இடையே தான் இரண்டாம் கட்ட தேர்தல் நடந்தது. அதில் 66.10சதவீதமான வாக்குகளைப் பெற்று மக்ரோன் வெற்றி பெற்றிருந்தார். மீண்டும் அதே வரலாறு இம்முறையும் திரும்பியிருந்தது.

கடந்த 21ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கான வாக்கெடுப்பு நடைபெற்றிருந்தது. 577 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத் தேர்லுக்கான வாக்கெடுப்பில் மக்ரோனின் மத்திய-வலதுசாரிக் கட்சியினருக்கு 245 இடங்கள் மட்டுமே கிடைத்திருக்கின்றன.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை அமைப்பதற்கு 289 இடங்கள் தேவையாகும். இதனால் மக்ரோனின் நாடாளுமன்ற பெரும்பான்மை அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த ஜனாதிபதி தேர்தலில் மையவாத வாக்குகளை மக்ரோன் தாக்கவைத்துக்கொண்டிருந்தாலும் கடந்த தேர்தலை விடவும் செல்வாக்கு குறைவடைந்திருக்கின்றது என்பது உணரப்பட்டது. ஏனென்றால், அவருடை வாக்குவங்கி வெகுவாகச் சரிந்திருந்தது.

இதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் ஒன்றித்துச் செயற்படாது தனியோட்டம் ஓடுவதற்கு மக்ரோன் எடுத்துள்ள முடிவு-களே அடிப்படையில் காரணமாகின்றன என்று அந்நாட்டு அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்தவுடனேயே நாடாளுமன்றத் தேர்தலில் மக்ரோன் தனது அதிகாரத்தினை தக்கவைப்பரா இல்லையா என்ற பரபரப்பான நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது.

இதற்கு காரணம், முடிவுகள் அறிவிப்பின் பின்னர் மக்ரோனை எதிர்த்துப் போட்டியிட்ட மரின் லு பென் கூறிய கருத்துக்கள் தான். 53 வயதாகும் மரின் லு பென் தொடர்ந்தும் அரசியல் செய்யப்போவதாக கூறினார்.

அதுமட்டுமன்றி, 'நாம் பிரதிநிதித்துவம் செய்த யோசனைகள் புதிய உயரங்களை எட்டியுள்ளன. இந்த தேர்தல் முடிவு ஒரு அற்புதமான வெற்றியைக் காட்டுகிறது. அடுத்து நடக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான போரை இந்த இடத்தில் இருந்து நாங்கள் தொடங்குகிறோம்' என்று அறைகூவினார்.

இந்நிலையில், கடந்த 21ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கான வாக்கெடுப்பு நடைபெற்றிருந்தது. 577ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத் தேர்லுக்கான வாக்கெடுப்பில் மக்ரோனின் மத்திய-வலசாரிக் கட்சியினருக்கு 245 இடங்கள் மட்டுமே கிடைத்திருக்கின்றன.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை அமைப்பதற்கு 289 இடங்கள் தேவை யாகும். இதனால் மக்ரோனின் நாடாளுமன்ற பெரும்பான்மை அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற தேர்தலில் புதிதாய் உருவான நியூப்ஸ் கூட்டணிக்கு 131 இடங்களும், வலசாரி தேசியப் பேரணிக் கட்சிக்கு 89 இடங்களும் கிடைத்தன. இதனால் எந்தவொரு தரப்பிடமும் பெரும்பான்மை இல்லாத நிலையே ஏற்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் கூட்டு ஆட்சி தான் சாத்தியமான நிலைமையாக உருவெடுத்துள்ளது.

எவ்வாறாயினும், வெறுமனே எட்டு ஆசனங்களைக் கொண்டிருந்த வலது சாரிப் பேரணி 89ஆசனங்களைப் பெற்றுள்ள மகிழ்ச்சியில் உள்ளது. அதேபோன்று, புதிதாக உருவான போதும் அறிமுகத்திலேயே அதிரடியான வெற்றி கிடைத்திருப்பதாக நியூப்ஸ் கட்சி கருதுகின்றது.

இவ்வாறான நிலையில் இந்த இரண்டு தரப்பினரும் மக்ரோன் அணியுடன் கைகோர்ப்பார்களா என்பதில் சந்தேகம் நிலவுகின்றது. அதுமட்டுமன்றி தேர்தலுக்குப் பின்னர் இவ்விரு அணிகளினதும் தலைமையாளர்கள் வெளியிட்டுள்ள கருத்தக்களும் சந்தேகத்திற்கு வலுவான காரணமாகின்றது.

மைய நீரோட்ட இடதுசாரி கட்சிகள், கம்யூனிஸ்ட்டுக்கள், பசுமைவாதக் கட்சி ஆகியவற்றை ஒருங்கிணைத்தே நியூப்ஸ் என்ற கூட்டணியை உருவாக்கியிருந்தன. இந்த அணியின் தலைவாக இருப்பவர் தீவிர இடதுசாரியான ஜோன் லுக் மெலென்கான். அவர் தேர்தலில் வெற்றியடைந்துள்ளார்.

அதன் பின்னர் தனது ஆதரவாளர்களிடம் கருத்துவெளியிட்ட அவர், 'ஜனாதி-பதி மக்ரோனின் கட்சி மொத்தமாக தோல்வியடைந்துவிட்டது. ஆட்சி அமைப்பதற்கான அனைத்து வாய்ப்புகளும் இப்போது எங்கள் கைகளில் இருக்கின்றது' என்று தனது ஆதரவாளர்களிடத்தில் குறிப்பிட்டுள்ளார்' என்று கூறியுள்ளார்.

அதேநேரம், தீவிர வலதுசாரி தேசிய பேரணியின் தலைவரான மரைன் லு பென் '8 இடங்கள் 89ஆக மாறியுள்ளன. மக்கள் தங்கள் முடிவைக் தெரிவித்து விட்டார்கள். மக்ரோனின் சாகசப் பயணம் முடிந்தது. அவரது ஆளும் கட்சி சிறுபான்மை அரசாகச் சுருங்கியுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், தேர்தல் முடிவு-கள் வெளிவந்தவுடன், தனது எலிசி அரண்மனையில் அவசர கூட்டமொன்றை மக்ரோன் நடத்தியுள்ளார். அந்தக் கூட்டத்திற்கு அண்மையில் பிரதமராக நியமித்த எலிசபத் போர்ன் உள்ளிட்ட முக்கிஸ்தர்களை அழைத்து மந்திர ஆலோசனையை நடத்தியுள்ளார் மக்ரோன்.

குறித்த சந்திப்பின் பின்னர், கருத்து வெளியிட்ட எலிசபத் போர்ன், பிரான்ஸ் இது போன்றதொரு தேசிய நாடாளுமன்றைப் பார்த்ததில்லை. இந்த நிலைமை நாட்டிற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைக் காட்டுகிறது. தேசிய மற்றும் சர்வதேச அளவில் நாம் எதிர்கொள்ளும் அபாயங்களைக் கருத்தில் கொண்டு, நடைமுறை பெரும்பான்மையை உருவாக்குவதற்கு செயற்படவுள்ளோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆக, மக்ரோனின் கட்சியானது நாடாளுமன்ற அதிகாரத்தினை தக்கவைப்பதற்கு கடுமையான பிரயத்தனத்தினைக் காண்பிக்கப்போகின்றது. அதற்கு வலது சாரிகள் நிச்சயமாக ஒத்துழைப்புக்களை வழங்கப்போவதில்லை. அதேநேரம், எலிசபத் போர்ன் போன்றவர்களும் ஒத்துழைப்புக்களை வழங்குவார்களா என்பதிலும் உறுதியான நிலைமைகள் இல்லை.

இவ்வாறான நிலைமை நீடிக்குமாக இருந்தால், நாடாளுமன்றில் சிறுபான்மை அரசாகவே மக்ரோனின் கட்சி இருக்கப் போகின்றது. இவ்விதமான நிலைமையானது. மக்ரோனின் சீர்திருத்தங்களுக்கும், திட்டங்களுக்கும், செயற்பாடுகளுக்கும்பெரும்முட்டுக்கட்டையாகவே இருக்கப்போகின்றது.

ஆக, பிரான்ஸ் அரசியல் களம் இப்போது வலது சாரிகளுக்கும், இதுசாரிகளுக்கும் இடையிலான போராட்ட மையக் களமாகியுள்ளது. இது நாட்டின் ஸ்திரத்தன்மையையும் கேள்விக்குள்ளாகினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்த நிலைமையானது, இரண்டு தடவைகள் ஜானாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றவர் என்ற சாதனை நாயகன் மக்ரோனுக்கு வேதனையானது தான்.

பிரான்ஸ் அரசியல் களம் இப்போது வலதுசாரிகளுக்கும், இதுசாரிகளுக்கும் இடையிலான போராட்ட மையக் களமாகியுள்ளது. இது நாட்டின் ஸ்திரத்தன்மையையும் கேள்விக்குள்ளாகினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. இந்த நிலைமையானது, இரண்டு தடவைகள் ஜானாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றவர் என்ற சாதனை நாயகன் மக்ரோனுக்கு வேதனையானது தான்.

## குருந்தூர் மலையில்... (இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் தாயகம் எங்கும் இத்தகைய ஆக்கிரமிப்புக்கள் முடுக்கி விடப்பட்டுள்ள நிலையில், குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சிங்களமயமாக்கல் மற்றும் பௌத்த சிங்களமயமாக்கல் என்பது தனித்தனியாகவும் கூட்டாகவும் முன்னெடுக்கப்படுகின்றது. தமிழர் தாயகத்தில் முல்லைத்தீவும் திருகோணமலையும் இதய மாவட்டங்கள் ஆகும். அத்துடன் இந்த மாவட்டங்களில் சைவ சமயத்திற்குரிய பல தொல்பொருட்கள் புதைந்து கிடக்கின்றன. இவை ஈழ மக்களின் பூர்வீகத்தின் ஆதாரங்களாகவும் கருதப்படுகின்றன.

இம் மாவட்டங்களில் ஒரு புறத்தில் சிங்களக் குடியேற்றம் மிக வேகமாக முன்னெடுக்கப்படுகின்றது. இன்னொரு புறத்தில் தமிழர்களின் பூர்வீகக் கோயில்களை துடைத்தழித்து அங்கே புத்தர் சிலைகளும் விகாரைகளையும் கட்டுகின்ற முயற்சிகளும் நடக்கின்றன. இதனை ஆளும் சிங்கள அரசும், பேரினவாதிகளும் பெரும் வேகத்தில் செய்து வருவது ஈழத் தமிழ் மக்களை பெரும் அச்சத்திற்கும் பீதிக்கும் தள்ளியிருக்கிறது. திருகோணமலை மாவட்டத்தில் நகரம், குச்சவெளிப்பிரசேம், சம்பூர்பிரதேசம்என்பனசிங்களஅரசின்பலதரப்பட்ட ஆக்கிரமிப்பில் சிக்கித் தவிக்கின்ற பகுதிகளாகும்.

அதேபோன்று, முல்லைத்தீவில், செம்மலை நாயாற்று பிள்ளையார் ஆலயம், குருந்தூர் மலை, வெடுக்குநாறிமலை ஆதிச் சிவன் ஆலயம் என்பன சிங்களப் பேரினவாதிகளின் இலக்காக உள்ளன. கடந்த காலத்தில் சிங்கள இராணுவப் படையுடனும், பௌத்த பிக்குப் படையுடனும் வந்த அமைச்சர் புத்தர் சிலை ஒன்றை கொண்டு வந்து வைத்து, பூசை செய்து, அங்கே சிங்கள பௌத்த தொன்மம் இருப்பதாக கூறி அகழ்வாராய்ச்சி செய்யப் போவதாக அறிவித்து பின்னர் விகாரை கட்டும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. தமிழ் மக்களின் இருப்பை அழிக்கும் ஒரு முயற்சி என்ற அச்சம் பெருகியுள்ளது. கோத்தபாய ஆட்சிக்கு வந்ததிற்குப் பின்னர், 2021ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் நாளில் அப்போதைய இராஜங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, இராணுவத்தின் பாதுகாப்புடன் வந்து விகாரைக்கு அடிக்கல் நாட்டினார்.

முல்லைத்தீவு நீதிமன்றால் 2018ஆம் ஆண்டில் ஆக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம், அங்கே உள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான ஆலயத்தில் மக்கள் வழிபடலாம் என்றும் எந்தவிதமான கட்டுமானங்களையும் இரு சாராரும் செய்ய முடியாது என்றும், தொல்லியல் திணைக்களம் மாத்திரம் ஆய்வுகளை செய்யலாமெனவும், வேறு தரப்பினர் ஆய்வுகளை செய்ய முடியாது ஆனால், தொல்லியல் ஆய்வுகளை செய்வதாக இருந்தால் யாழ் பல்கலைகழகத் தொல்லியல் துறையின் பங்களிப்போடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குருந்தூர் மலை ஆதிசிவன் ஐய்யனார் ஆலயத்தில் பௌத்த சின்னங்களை திணிக்கும் முயற்சிக்கான கட்டுமானப் பணிகளுக்கு முல்லைத்தீவு நீதிமன்றம் தடைவிதித்துள்ள நிலையில், கடந்த ஜூன் 13ஆம் திகதி ஏற்கனவே கட்ட முயற்சித்து தடைவிதிக்கப்பட்ட விகாரையை அமைத்து, கோபுரக் கலசங்களை வைத்து புத்தர்சிலைகளை வைக்க பெருமெடுப்பில் முயற்சி இடம்பெற்றுள்ளது. இந்த நிலையில் அங்கு திரண்ட மக்கள் அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து நிகழ்வு நிறுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றில் வழக்கு நிலையில் இருக்க, நீதிமன்றம் தடுத்து நிறுத்திய கட்டுமானத்தை சிங்கள பிக்குகள் நிறைவேற்ற முற்படுகின்றமை வாயிலாக ஸ்ரீலங்கா சட்டத்திற்கு சிங்கள பிக்குகள் வழங்கும் மரியாதையும் புலப்படுகிறது.

போரில் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் 2009இற்குப் பின்னர் தென்னிலங்கையில் இருந்து சில கற்களை கொண்டு வந்து வைத்துவிட்டு அது பௌத்த சிங்கள பூமி என்று சொன்ன சிங்களப் பேரினவாதம், முல்லைத்தீவு போன்ற அடர்ந்த காடுகளுக்குள் என்ன திட்டங்களை தீட்டியுள்ளது என்பதுதான் தமிழர்களுக்கு இப்போது அதிர்ச்சி தருகின்றது. ஈழத்தின் தொன்மை சான்றுகள் புதைந்த தென்னிலங்கையில் சென்று இதோபோன்ற ஆராய்ச்சி ஒன்றை நடாத்த முடியுமா? தென்னிலங்கையில் அழிக்கப்பட்ட ஈழச் சிவாலயங்களை நிறுவ தமிழர்களுக்கு அனுமதி கிடைக்குமா? குருந்தூர் மலையில் தமிழர் மண்ணில் வந்து சிங்களக் பிக்குகள் இப்படி அராஜகம் புரிவதை எப்படி சகித்துக் கொள்வது?

**குருந்தூர் மலை ஆதிசிவன் ஐய்யனார் ஆலயத்தில் பௌத்த சின்னங்களை திணிக்கும் முயற்சிக்கான கட்டுமானப் பணிகளுக்கு முல்லைத்தீவு நீதிமன்றம் தடைவிதித்துள்ள நிலையில், கடந்த ஜூன் 13ஆம் திகதி ஏற்கனவே கட்ட முயற்சித்து தடைவிதிக்கப்பட்ட விகாரையை அமைத்து, கோபுரக் கலசங்களை வைத்து புத்தர்சிலைகளை வைக்க பெருமெடுப்பில் முயற்சி இடம்பெற்றுள்ளது. இந்த நிலையில் அங்கு திரண்ட மக்கள் அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து நிகழ்வு நிறுத்தப்பட்டுள்ளது.**

புலிகள் இருந்தால் இப்படி சிங்களம் தமிழர் தாய் நிலத்தில் இறங்கி கூறு போட இயலுமா? தமிழர் தாயகத்தில் பௌத்த சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்பை நிறுத்துமாறு கோரி, வீதியில் உண்ணாமல் இருந்து ஒரு உறுதியான போராட்டத்தை நடாத்த தமிழ் தலைவர்கள் களம் இறங்க வேண்டும். தமிழ் இனத்தையும் நிலத்தையும் அழிக்கும் சிங்கள அரசிடம் நியாயம் பேசிப் பயனில்லை என்பது அறுபதாண்டு கால அனுபவம். இவ் ஆக்கிரமிப்புக்களை நிறுத்தும் சர்வதேச தலையீட்டைக் கோரிய தீர்க்கமான ஒரு போராட்டத்தை முன்னெடுப்பதன் வாயிலாகவே, தமிழர் தாயகம் என்ற எம் உயிரினும் மேலான தாய்நிலத்தை பாதுகாக்க முடியும். இல்லையேல், குருந்தூர் மலையில் நம் இனமும் தொன்மையும் புதைக்கப்படும்.






































நமது ஈழநாட்டின் உதவிக்கரம் திட்டத்தின் கீழ் இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் தெரிவு செய்யப்பட்ட விசேட தேவையுடைய 20 குடும்பங்களிற்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கம் விடுத்த கோரிக்கைக்கு இணங்க மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் நமது ஈழநாடு உதவிக்கரத்தினால் 20 குடும்பங்களிற்கும் அரசி, மா, சீனி, பருப்பு, உட்பட அத்தியவசிய உணவுப்பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன.